[2014 ஜூலை 15

2.12 தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம்

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி திருநங்கைகளை மூன்றாம் பாலினமாகக் கருதி அங்கீகாரம் வழங்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தினரால் ஒதுக்கி வைக்கப்பட்டும் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறப்படாமல் திருநங்கைகள் பலர், பல்வேறு இன்னல்கள் மற்றும் கொடுமைகளால் பாதிக்கப்படுவதோடு மட்டுமில்லாமல், அவர்களுக்கு பல உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. மூன்றாம் பாலினமாக மாறும் நிலையில் பள்ளிக்கூடத்திலிருந்துகூட வெளியேற்றப்படுகிறார்கள். அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு போன்றவை வயது முதிர்வின் காரணமாக மறுக்கப்படுகின்றன. மேற்கண்ட சூழ்நிலையில், அவர்கள் தங்கள் சொந்த குடும்பத்திலிருந்து வெளியேறுவதுடன், பள்ளியிலிருந்து இடைநிற்றலால் நாடோடியாக வாழவேண்டிய சூழ்நிலை உருவாகிறது. அப்படி வெளியேற்றப்படும் நிலையில் அவர்கள் கையில் மிகவும் அத்தியவாசியமான ஆவணங்கள் குறிப்பாக, பிறப்புச் சான்றிதழ், குடும்ப அட்டை, கல்விச் சான்று, சாதிச் சான்று மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் போன்றவை இருப்பதில்லை. இதுபோன்ற திருநங்கைகளுக்கு ஏற்படும் மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காகவும், அவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும் அரசால் திருநங்கைகள் நல வாரியம் உருவாக்கப்பட்டது.

திருநங்கைகள் மதிக்கத்தக்க வகையில் தொழில் செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை நல்லமுறையில் ஈட்டுவதற்கு சிரமப்படுகின்றனர். திருநங்கைகள் தங்களது வாழ்வாதாரத்தை, பொருளாதாரரீதியாக உயர்த்திக் கொள்ள 442 உறுப்பினர்களைக் கொண்ட 51 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.2.20 கோடி மொத்த திட்டத் தொகையில், பல்வேறு திட்டங்களுக்காக 25 சதவிகித மானியமாக ரூ.55.00 இலட்சமும், ரூ.1.65 கோடி வங்கிக் கடன் பெற்று வழங்கப்பட்டுள்ளது. பொருளாதாரக் கடன்களாக மளிகைக் கடை, பசு மாடுகள் வளர்த்தல், சிற்றுண்டி உணவகம், சோப்பு உற்பத்தி செய்தல், பால் பொருட்களை உற்பத்தி செய்தல், பயணிகள் ஆட்டோ ஓட்டுதல், ஆட்டோக்களில் சரக்கு ஏற்றுதல் மற்றும் துணி வியாபாரம், அரிசி வியாபாரம் போன்ற பல்வேறு தொழில்களை திருநங்கை சுய உதவிக் குழுக்கள் செய்து

2014 ஜூலை 15]

வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு உதவிடும் வகையில், மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,000/- வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்கள். இதுபோன்று ரூ.1,000/- உதவித் தொகை வழங்குவது இந்தியாவிலேயே முதன்முறையாகும். தற்போது, இத்திட்டத்தின்கீழ் 743 திருநங்கைகள் மாதாந்திர ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

திருநங்கைகள் நலத் திட்டத்திற்காக 2014-2015 ஆம் நிதியாண்டில் ரூ.200.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.13 பெண்களுக்கான நலச் சட்டங்கள்

சமூக நலத் துறையை முகமையாகக் கொண்டு கீழ்க்காணும் சமூக நலச் சட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005
2. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
3. பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறை தடுப்புச் சட்டம், 2013

2.13.1 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

இச்சட்டம் சமுதாயத்தில் வன்முறை இல்லாத குடும்பத்தில் பெண்கள் வசிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சிறப்பு அம்சங்கள் உள்ளடக்கிய சட்டமாகும்.

இச்சட்டம் பெண்கள் புகுந்த வீட்டில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்கிறது. மேலும் இச்சட்டம் உரிமையியல் மற்றும் குற்றவியல் பிரிவுகளைக் கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்த 60 நாட்களுக்குள் தீர்வுபெற முடியும். இச்சட்டத்தின்கீழ், குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தனது கணவர் மற்றும் கணவரைச் சார்ந்த உறவினர்கள்மீதும் மற்றும் திருமணம் போன்ற உறவில் வாழும் ஆண் நபரை எதிர்மனுதாரராகச் சேர்த்து, நிவாரணம் கோரி, வழக்குத் தொடருவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.